**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 44/2020**

2025–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 09–ம் நாள் செவ்வாய்க்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா.சந்திரமோகன்.,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 09.09.2025 | தகப்பனார் பெயர்: | கோவிந்தசாமி |
| பெயர்: | பார்த்தசாரதி (PW–1 Cross ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | புதுப்பட்டினம் | சமயம்: | |
| தொழில்: | | வயது : | 60/2025 |

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : 09.09.2025**

**(ஆரம்பித்த நேரம்– 13.45)**

1. தாவா சொத்துக்கள் புதுப்பட்டினம் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். என்ன பரிகாரம் கேட்டு நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 1, 2 பிரதிவாதிகள் எனது இடத்தை ஆக்கிரமனம் செய்துள்ளதால் அதற்காக நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் வேறு எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரிதான். நான் வழக்கு தாக்கல் செய்துள்ளது என்பது ஒரே அயிட்ட சொத்திற்கு மட்டும் தான். அதன் புல எண்– 273/7A ஆகும். அதில் 7 ச.மீ. 1, 2 பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். நான் தாக்கல் செய்த வழக்கில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதாக சொல்லப்படுவது B ஷெடியூல் சொத்தாகும். நான் தாக்கல் செய்த பிராதில் பாரா 6 ல் 78 மீ. அளவில் முக்கோண வடிவில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

2. ஆனால் பிராதின் சொத்து விபரத்தில் B ஷெடியூல் சொத்தில் 7 ச.மீ தான் என்று நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் என்னுடைய சொத்து ஆக்கிரமிப்பு சம்மந்தமாக தான் கூறியுள்ளேன். நான் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட

பகுதியை மாற்றி மாற்றி கூறுகிறேன், அதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளது A அட்டவணை சொத்து எனக்கு சொந்தம் என்றுதான் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.4 ஆவணத்தின்படி தாவா சொத்துக்கள் கோவிந்தசாமி மகன் இளவன் என்ற பெயரில் உள்ளது என்றால் எனது பெயரில் பட்டா மாற்றப்பட்டுள்ளது. அந்த பட்டாவை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

3. நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்தின்படி தாவா சொத்து இளவனுக்கு சொந்தமானது, அதனால் அதன்படி நான் எந்த பரிகாரமும் கேட்க முடியாது என்றால் சரியல்ல. தாவா A அட்டவணை பொறுத்து சுவாதீன மீட்பு பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

1, 2 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

**(முடிவு நேரம்– 13.55)**